**In the Court of the Principal District Judge, Vellore District.**
**Deposition of Witness for PW-7**
**SC.No.138/2017**

| | |
|---|---|
| **Name** | **: Irfan @ Irfan Ahamed** |
| **Father/Husband Name** | **: M.Anwar Basha** |
| **Village** | **: Ambur** |
| **Taluk** | **: Ambur** |
| **Caste** | **: Muslim** |
| **Calling/Occupation** | **: Reporter** |
| **Religion** | **: Muslim - Indian** |
| **Age** | **: 34** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.01.2023.**

முதல் விசாரணை

எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசல் ஆதார் அட்டையுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு சரியாக இருந்ததின் பேரில் அசல் மனுதாரர் வசம் ஒப்படைக்கப்பட்டது) அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நான் ஆம்பூரில் வசித்து வருகிறேன். நான் பத்திரிக்கை ரிப்போர்ட்டராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சாட்சி சொன்ன அ.சா.2 ஐ தெரியும். அ.சா.2 எனக்கு நான்கு வருடங்களாக பழக்கம். இந்திய தவ்ஹித் ஜமாத்தில் நகர துணைத் தலைவராக இருந்தார். அ.சா.2 ன் உடைய மருமகன் இந்த வழக்கில் இறந்துபோன ஷமீல் பாஷாவை தெரியும். 19.06.2015 அன்று என்னை கவுஸ்பாஷா தொலைபேசியில் அழைத்தார். தன்னுடைய மருமகன் ஷமீல்பாஷாவை பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் இருந்து அழைத்து வருவதாகவும் அவரை பள்ளிகொண்டா காவல் ஆய்வாளர் அடித்து விட்டதாகவும் என்னிடம் சொன்னார். அவரை ஆம்பூர் ஒ.ஏ.ஆர். தியேட்டர் அருகே மசரூம் மேல்நிலை பள்ளி அருகே ஆட்டோவை நிற்க வைத்தார். அங்கு கவுஸ் பாஷா இருந்தார். ஷமீல் பாஷா ஆட்டோவில் இருந்தார். சகீர் அகமது அங்கே வந்தார். அப்போது என்ன நடந்தது

என்று ஷமீல் பாஷாவை விசாரித்தேன். அப்போது அவர் தன்னை பள்ளிகொண்டா காவல்நிலைய ஆய்வாளர் மார்டின் தன்னை அடித்து விட்டதாக சொன்னார். ஆய்வாளர் பெயர் மார்டின் என்று சொன்னார். ஆய்வாளர் மார்ட்டினை எனக்கு தெரியாது. இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள 1 மற்றும் 5 எதிரிகளை தெரியாது. மற்ற எதிரிகளையும் தெரியாது. ஷமீல் பாஷாவிற்கு கையில் அடிபட்டு இருந்தது. எந்த கை என்று தற்போது எனக்கு நியாபகம் இல்லை. அவரை ஆம்பூர் அரசு மருத்துவமனையில நாங்கள் அனைவரும் சென்று அனுமதித்தோம். பிறகு அவருக்கு சிகிச்சை நடந்துக்கொண்டு இருந்தது. ஆம்பூர் மருத்துவமனையில் ஒன்றிரண்டு நாட்கள் சிகிச்சைக்குப் பிறகு மேல்சிகிச்சைக்காக அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பினர். பின்னர் அங்கிருந்து ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனைக்கு அனுமதிக்கப்பட்டார். பின்னர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். வழக்கு சம்மந்தமாக அ.சா.2 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.வழக்கு சம்மந்தமாக சிபிசிஐடி அதிகாரி என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை (1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில்)

நான் பிகாம் பட்டப்படிப்பு இரண்டு வருடம் படித்து விட்டு இரண்டாவது வருடத்தில் டிஸ்கண்டினிவ் செய்துவிட்டேன். இந்திய தவ்ஹித் ஜமாத்தில் கவுஸ்பாஷா நகர தலைவராக இருந்தார். அவருக்கும் எனக்கும் நல்ல பழக்கம் உண்டு. அந்த அமைப்பு தொடர்பாக கவுஸ்பாஷா என்னை தொடர்பு கொண்டு செய்திகளை கூறினார். கவுஸ்பாஷாவிற்கு நகர தலைவர் என்ற முறையில் அந்த வட்டாரத்தில் நல்ல தொடர்பு உள்ளது என்றால் சரிதான். ஆம்பூர் அரசு மருத்துவ மனையிலும் அவருக்கு அனைவரையும் தெரியும் என்றால் சரியல்ல. பிற்பகல் 3 மணி அளவில் ஆம்பூர் அரசு மருத்துவ மனையில் ஷமீல்பாஷாவை சேர்த்தோம். அவசர பிரிவில் அவருக்கு முதல் சிகிச்சை செய்யப்பட்டது. அப்போது நான் மருத்துவமனைக்கு வெளியில் இருந்தேன். சகீர்அகமதுவும் அந்த அமைப்பில் துணை செயலாளர். ஷமீல் பாஷாவை

மருத்துவமனையில் சேர்ப்பதற்கு முன்பாக எங்கு இருந்தார் என்று எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் இருப்பதாக கேள்விப்பட்டேன். கவுஸ்பாஷா புகார் கொடுக்கும்போது நானும் உடன் இருந்தேன். புகார் எழுதியது யார் என்று தெரியாது. புகாருக்கு ரசீது கொடுக்கவில்லை. முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யுமாறு என்னுடன் இருந்தவர்கள் கேட்டார்கள். புகாரை, நகர ஆய்வாளர் உயர் அதிகாரிகள் இல்லாததால் நாங்கள் புகார் எடுக்க முடியாது என்று சொன்னார்கள். அவர் பெயர் தெரியாது. கவுஸ்பாஷா எனக்கு நெருக்கமானவர் என்பதாலும் ஒரு அமைப்பில் ஒன்றாக இருப்பவர் என்பதாலும் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொய் சாட்சி அளிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. சிபிசிஐடி போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்பது நியாபகம் இல்லை. வருடம் கூட நியாபகம் இல்லை. 2016 வருடத்தில் இருக்கலாம். நான் சொல்ல சொல்ல எழுதிக் கொண்டார்கள். அதில் நான் கையெழுத்து போட்டேன்.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை 2 முதல் 5 எதிரிகள் தரப்பில் அனுசரிக்கப்படுகிறது.

மறுவிசாரணை இல்லை.

N VASANTHALEELA

Digitally signed by N VASANTHALEELA